## சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - பதிவுத்துறை - செல்வி.Kராஷ்மி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறை செய்து - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

### வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2)துறை

அரசாணை (டி) எண்.13

நாள்: 03.07.2023
சோபகிருது, ஆனி-18,
திருவள்ளுவர் ஆண்டு,2054.
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.42648/கே2/2021, நாள் 13.01.2022.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.42648/கே2/2021, நாள் 27.12.2022.

-------

**ஆணை:**

பதிவுத்துறையில், நாகப்பட்டினம் பதிவு மாவட்டம் அசல் பத்திரப்பிரிவில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வந்தபோது, பணிக்காலத்திலிடையே 03.06.2021 அன்று காலமான திருமதி.ப.அறிவுக்கொடி என்பவரின் மகள் செல்வி.Kராஷ்மி தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 24.09.2021 நாளிட்ட மனு அளித்தார். நடைமுறையிலிருக்க அரசாணைகளின்படி, அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறை தலைவர், செல்வி.Kராஷ்மி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளை பெற்றிருந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, செல்வி.Kராஷ்மி

07.02.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். செல்வி.K.ராஷ்மி, இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறை தலைவர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. இந்நிலையில், பதிவுத்துறை தலைவரின் செயற்குறிப்பு அரசால் மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கவர்ந்தாய்வு செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப்பணியில், பதிவுத்துறையில், மயிலாடுதுறை பதிவு மாவட்டத்தில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள செல்வி.K.ராஷ்மி என்பவரை 07.02.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப்படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகைப் பெற உரிய விதியின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.2028/ட்டி1/2023, நாள். 21.04.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.4583169/ஜி1/2023-1, நாள் 23.05.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

பெறுநர்:

பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28. (இணைப்புடன்).

செல்வி.K.ராஷ்மி, இளநிலை உதவியாளர்,
மயிலாடுதுறை பதிவு மாவட்டம். (பதிவுத்துறைத் தலைவர் வழியாக)

**நகல்:**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9.

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை-28

மே.எ.எண்.42648/கே2/2021, நாள்.01.08.2023.

அரசாணை (3D) எண்.13. வணிகவரி மற்றும் பதிவு(எம்2)த்துறை, நாள்.03.07.2023 சார்பு செய்யப்படுகிறது.

செல்வி.K.ராஷ்மி இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள மயிலாடுதுறை மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியரது அசல் S.S.L.C. மதிப்பெண் சான்று அனுப்பி வைக்கப்படுகிறது. அதனை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப மயிலாடுதுறை மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

/ஆணைபின்படி/

கண்காணிப்பாளர்

பெறுநர்
செல்வி.K.ராஷ்மி இளநிலை உதவியாளர்
(மயிலாடுதுறை மாவட்டப்பதிவாளர் மூலம்)

நகல்
1. மாவட்டப்பதிவாளர், மயிலாடுதுறை
   (அசல் S.S.L.C. மதிப்பெண் சான்றுடன் ப.எண்.1687316/ஏப்ரல் 2012)
2. கே1 இருக்கையாளர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
3. முக்கிய ஆணை கோப்பு / தனி நகல் – 1.